# வாழ்விக்கும் வைணவம்

**ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி**
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Cell. 9600824414
Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பிரேத ஜென்மத்தை அடைகிறவர்கள் யார் யார் என்று பெருமாள் அட்டவணை தந்து கொண்டிருக்கிறார். அடுத்து அவர் குறிப்பிடுவது: ஒருவன் இறந்தபிறகு அவனுக்குச் செய்ய வேண்டிய சம்ஸ்காரங்களைச் செய்ய அவன் குலத்தில் யாரும் இல்லாமல் செத்துப் போனவனைத் தான். இறப்பு என்பது நம்மைப் பொறுத்தவரை ஒரு வாழ்வின் முடிவாகத் தெரிகிறது. ஆனால் உண்மையில் அது முடிவல்ல – ஒரு தொடக்கம். இறந்த பிறகு ஒரு ஆத்மா அடையும் அனுபவங்களுக்கு இங்கே இருப்பவர்கள் பொறுப்பாகிறார்கள். அதனால் தான் அந்தக் காலத்தில் நம் முன்னோர்கள் அனாதைப் பிணங்களுக்குக் கூடக் கருணை காட்டினார்கள். நரகத்தில் வாடும் பாவிகளுக்காகக் கூட நம்மைப் பிரார்த்திக்கச் சொல்லுவது வைதீக தர்மம். அனாத பிரேத சம்ஸ்காரம் பெரும் புண்ணியம் என்று பெரியோர்கள் சொல்லுவர்கள்.

பெற்றோருக்கு சிரார்த்தம் செய்யாமலேயே வாழ்ந்து ஒருவன் இறந்தால் அவனும் பிரேத ஜென்மத்தை அடைகிறான். கடமைகளைச் செய்யாமல் நாம் தட்டிக் கழித்தாலும் அதைக் கவனிக்காமல் இருப்பதில்லை கடவுள். நம் கவனக் குறைவுகளை இந்த உலகம் கண்டு கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அந்த உத்தமன் கவனிக்கிறான், தண்டிக்கிறான். மலையிலிருந்து விழுந்து இறந்தவர்கள், தூங்கிக் கொண்டே இறந்தவர்கள் ஆகியோருக்குக் கூட பிரேத ஜென்ம அபாயம் உண்டு. உயிர் போகும் வேளையில் தெய்வத்திருநாமங்களை உச்சரிப்பது அல்லது நினைப்பது அல்லது கேட்பது முக்கியம் என்பது முகுந்தனின் கருத்து. மாத விலக்கான பெண்ணைத் தீண்டி ஸ்நானம் செய்யாமல் இறந்தால் கூட பிரேத ஜென்மம் கிட்டும் என்று பெருமாள் எச்சரிக்கிறார்.

பெண்கள் விஷயத்தில் பகவான் கருணை உள்ளவனாக இருக்கிறான் என்பதற்கு ஆதாரமாக இந்த இடத்தில் வினதை மகனுக்கு விஷ்ணு ஒரு கருத்தைக் கூறுகிறார். அது என்னவென்றால் தாயோ, மனைவியோ, மகளோ, மருமகளோ, ஒழுக்கம் கெட்டவர்கள் என்று நம்பும்படி நாலுபேர் சொன்னதைக் கேட்டு அது உண்மைதானா என்று தீர விசாரிக்காமல் அவர்களைத் தள்ளி வைப்பவர்கள் நிச்சயம் பிரேத ஜென்மம் அடைவார்கள் என்கிறார் பெருமாள். அவசர புத்திக்காரர்களும், பெண்களை இந்துமதம் இழிவுப்படுத்துகிறது என்று கூறுகிறவர்களும் சிந்திக்க வேண்டிய இடம் இது.

மனுநீதிக்கு விரோதமாக தீர்ப்பு வழங்குபவர்கள், வேத விற்பன்னர்களையும் பசுக்களையும் கொல்பவர்கள் அல்லது துன்பப் படுத்துபவர்கள், மதுபான மயக்கத்திலேயே வாழ்வைக் கழிப்பவர்கள், தாய்க்குச் சமமாக மதிக்க வேண்டிய குருபத்தினியைக் கூடி மகிழ்பவர்கள், பட்டு, தங்கம் ஆகியவற்றைத் திருடுபவர்கள் – இவர்கள் அனைவருக்கும் கண்டிப்பாக பிரேத ஜென்மம் உண்டு என்று தீர்மானமாகக் கூறும் பெருமாள் அப்படிப் பிரேத

ஜென்மம் அடைந்தவர்கள் கொடிய பாலைவனங்களின் ஆவிகளாய் அலைந்து துன்புறுவார்கள் என்றும் பயமுறுத்துகிறார்.

இதற்கு அடுத்த பகுதியில் சகலலோக நாயகனான சக்ரபாணி மனித வாழ்வைப்பற்றி கூறும் வாசகங்கள் நெஞ்சில் நிலைப்பவை நம்மை நினைக்க வைப்பவை! எமன் என்று ஒருவன் இருக்கிறான் என்ற நினைவே இல்லாமல் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்று பரமன் வருத்தப்படுகிறார். வாழ்வுக் காலத்தை முடித்து உயிரைக் கவர்வதனால் அன்றோ அவன் காலன் என்று அழைக்கப்படுகிறான்? மனிதர்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொரு தீய செயலாலும் தங்கள் ஆயுளைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள் என்ற ஜீவரகசியத்தை நாரணன் இங்கே வெளியிடுகிறார். நீண்ட ஆயுளோடு வாழும் பேறு பெற்றவரும் தம் பாபங்களால் அதை இழக்கிறார்கள். மரித்தவன் வீட்டில் உண்பவனும், மற்றவன் மனைவியை விரும்புவனும் மரணத்துக்கு வரவேற்பு கொடுக்கிறான் என்கிறார்.

மூன்று கோடி ஆண்டு வாழ வேண்டும் என்று இராவணனுக்கு நான்முகனே தலையெழுத்து எழுதினான். ஆனால் அந்த அரக்கர் தலைவனோ அடுத்தவன் மனைவிக்கு ஆசைப்பட்டு அதைக் குறைத்துக் கொண்டான். இது தானே ராமாயணம் நமக்கு புகட்டும் பாடம்! "எனக்கு 8 ஆம் இடம் ஜாதகத்தில் மிக பலமாக இருக்கிறது; ஆயுளுக்குக் குறைவில்லை" என்று இறுமாந்து எத்தனையோ பாபச் செயல்களில் ஈடுபடும் அறிவிலிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கிறார் அனந்த சயனன். வாழ்நாளை வீழ்நாளாக்கி, ஜபங்களை வெறுத்து, தவங்களை மறுத்து, மஹான்களை பரிகசித்து, சாத்திரங் களை ஒதுக்கி வைத்து, உணவும் உறக்கமும் இன்பமும் மட்டுமே போதும் என்று வாழ்பவர்கள் நரகத்தின் கொடிய பகுதிகளில் தமக்கு ஒரு நீண்ட நாள் இருப்பிடத்தை முன் பதிவு செய்து கொள்ளுகிறார்கள் என்று வேதனையோடு விளம்புகிறார் அந்த வேதநாயகன்.

மனித சரீரம் நிலையற்றது என்று நமக்குத் தெரியும். ஆனால் அதை அவர் கூறும் விதம் மிக அழகானது. "காலையில் உண்டால் மாலையில் பசிக்கும். எத்தனை முறை புசித்தாலும் பசி நிரந்தரமாக நிற்கப் போவதில்லை. இந்த உடல் யாருக்குச் சொந்தம்? அதைச் சுமக்கும் ஆத்மாவுக்கா? சம்பளம் கொடுக்கும் எஜமானனுக்கா? தோற்றுவித்த தகப்பனுக்கா? பத்துமாதம் சுமந்த தாய்க்கா? அந்தத் தாயின் தந்தைக்கா? பெற்றோரின் பெற்றோருக்கா? சுடுகாட்டில் எரிக்கும் நெருப்புக்கா அல்லது பிடுங்கித் தின்னும் நாய்நரிக்கா? – இவர்கள் யாருக்குமே இல்லை. நீரில் தோன்றும் குமிழி போல் கணத்தில் தோன்றி சில தினத்தில் மறையும் இந்த நாசமாய் போகும் சரீரத்துக்காக மனிதன் எவ்வளவு பாபங்களைச் செய்கிறான்! பிறப்பை வீணாக்கிக் கொள்ளுகிறான்! அடுத்தபடி நற்கதி அடைய வேண்டும் என்று நினைத்துப் பார்க்கிறானா?" என்று பெருமாள் அங்கலாய்க்கும்போது அங்கே நாம் நாராயணனைப் பார்க்கவில்லை. ஒரு நல்ல தகப்பனைப் பார்க்கிறோம். மகனுக்காக கண்ணீர் வடிக்கும் தாய்ப் பாசத்தைப் பார்க்கிறோம்.

ஒரு ஆத்மா ஆறறிவுள்ள மனிதப் பிறவி அடைவதற்குள் எத்தனையோ கீழ் ஜென்மங்க ளைத் தாண்டி ஒரு மனிதத் தாய்க்கு மகனாகப் பிறக்கும் போது, பால்யம் விளையாட்டில் போய் விடுகிறது; இளமையும் நடுவயதும் இன்பத்தில் போய் விடுகிறது; முதுமையோ நோய்களிலும் மனச்சோர்விலும் போய் விடுகிறது. இந்த ஆத்மா இறைவனைப் பற்றியும், இறப்பைப் பற்றியும் பிறப்பை பற்றியும் எப்போது தான் சிந்திக்கும்? என்று கவலைப்படும் கண்ணனின் அடுத்த வாசகம், கருட புராணத்தில் என்னவென்று அடுத்த மாதம் பார்ப்போம்.